## மெய்யெண்களின் தொடர்களும் தொடர்வரிசைகளும்

### இரண்டு மதிப்பெண் கேள்விகள்

1 ) 4,9,14,... என்ற கூட்டுத் தொடர்வரிசையின் 17ஆவது உறுப்பைக் காண்க.
2 ) 31 + 33 + ... + 53 என்ற தொடரின் கூடுதல் காண்க.
3 ) 1,2,4,8,... என்ற பெருக்குத் தொடர்வரிசையில் 1024 என்ற உறுப்பு எத்தனையாவது உறுப்பு எனக் காண்க.
4 ) 125,120,115,110, என்ற கூட்டுத் தொடர்வரிசையின் பொது வித்தியாசத்தையும் 15ஆவது உறுப்பையும் காண்க.
5 ) 13 ஆல் வகுப்படும் ஈரிலக்க மிகை முழு எண்களின் எண்ணிக்கையைக் காண்க.
6 ) முதல் 125 இயல் எண்கள் கூடுதல் காண்க.
7 ) 2 + 6 + 18 + ...... கூடுதல் 728 எத்தனை உறுப்புகளைக்கூட்டினால் கிடைக்கும்
8 ) கூடுதல் காண்க 5 + 11 + 17 + ........ + 95
9 ) $1^2 + 2^2 + 3^2 + \dots + 25^2$ கூடுதல் காண்க
10 ) $1^3 + 2^3 + 3^3 + \dots + 20^3$ கூடுதல் காண்க

### ஐந்து மதிப்பெண் கேள்விகள்

1 ) 100-க்கும் 200-க்கும் இடையேயுள்ள 5ஆல் வகுபடாத அனைத்து இயல் எண்களின் கூட்டற்பலனைக் காண்க.
2 ) 300-க்கும் 500-க்கும் இடையே 11ஆல் வகுபடும் அனைத்து இயல் எண்களின் கூட்டற்பலனைக் காண்க.
3 ) ஒரு பெருக்குத் தொடர்வரிசையில் முதல் மற்றும் ஆறாவது உறுப்புகள் முறையே $\frac{1}{3}$ , $\frac{1}{729}$ எனில், அப்பெருக்குத் தொடர்வரிசையைக் காண்க.
4 ) $a, b, c$ ஆகியன கூட்டுத் தொடர்வரிசையில் இருப்பின் $(a - c)^2 = 4(b^2 - ac)$ என நிறுவுக.
5 ) 9 ஆல் வகுப்படும் அனைத்து முன்றிலக்க இயல் எண்களின் கூடுதல் காண்க.
6 ) 6 + 66 + 666 +......... எனும் தொடரின் முதல் n உறுப்புகளின் கூடுதல் காண்க
7 ) $16^2 + 17^2 + 18^2 + \dots + 25^2$ கூடுதல் காண்க
8 ) $1^3 + 2^3 + 3^3 + \dots + k^3 = 4356$ எனில் k ன் மதிப்பை காண்க
9 ) 16 செ.மீ, 17 செ.மீ, 18 செ.மீ, 30 செ.மீ ஆகியவற்றை முறையே பக்க அளவுகளாக கொண்ட 15 கனசதுரங்களின்கன அளவுகளின் கூடுதல் காண்க
10) ஒரு பெருக்குத்தொடரின் முதல் $n$, $2n$ மற்றும் $3n$ ஆகிய உற்ப்புகளின் கூடுதல்கள் முறையே $S_1, S_2$ மற்றும் $S_3$ எனில், $S_1 (S_3 - S_2) = (S_2 - S_1)^2$ என நிறுவுக.

## புள்ளியியல்

### இரண்டு மதிப்பெண் கேள்விகள்

1 ) 59,46,30,23,27,40,52,35,29 ஆகிய புள்ளி விவரங்களின் வீச்சு, மற்றும் வீச்சுக்கெழு காண்க
2 ) 43,24,38,56,22,39,45, ஆகிய புள்ளி விவரங்களின் வீச்சு, மற்றும் வீச்சுக்கெழு காண்க
3 ) ஒரு புள்ளி விவரத்தொகுப்பின் மீப்பெருமதிப்பு 7.44 மற்றும்.அதன் வீச்சு 2.26 எனில் அத்தொகுப்பின் மீச்சிறுமதிப்பைக் காண்க
4 ) ஒரு புள்ளி விவரத்தின் மீச்சிறு மதிப்பு 12 .அதன் வீச்சு 59 எனில் அப்புள்ளி விவரத்தின் மீப்பெரு மதிப்பைக் காண்க
5 ) முதல் 13 இயல் எண்களின் திட்டவிலக்கத்தைக் கணக்கிடுக.
6 ) முதல் 10 இயல் எண்களின் திட்டவிலக்கத்தைக் கணக்கிடுக.
7) கண்டறிந்த புள்ளி விவரத் தொகுப்பிலுள்ள 20 மதிப்புகளின் திட்ட விலக்கம் $\sqrt{5}$ என்க.புள்ளி விவரத்தின் ஒவ்வொரு மதிப்பையும் 2ஆல் பெருக்கினால் கிடைக்கும் புதிய புள்ளி விவரங்களின் திட்டவிலக்கம் மற்றும் விலக்க வர்க்கச்சாரசரி காண்க
8 ) ஒரு புள்ளி விவரத்தின் மாறுபாடுக்கெழு 57 மற்றும் திட்டவிலக்கம் 6.84 எனில், அதன் கூட்டுச்சராசரியைக் காண்க
9 ) ஒரு புள்ளி விவரத்தின் மிகப்பெரிய மதிப்பு 3.84 கி.கி .அதன் வீச்சு 0.46 கி.கி அவைகளின் மீச்சிறு மதிப்பைக் காண்க
10 ) ஒரு குழுவில் 100 பேர் உள்ளனர் அவர்களின் உயரங்களின் கூட்டுச்சராசரி 163.8 செ.மீ மற்றும் மாறுபாட்டுக்கெழு 3.2 எனில் அவர்களுடைய உயரங்களின் திட்ட விலக்கத்தைக் காண்க.

**ஐந்து மதிப்பெண் கேள்விகள்**

1 ) பின்வரும் மதிப்புகளின் மாறுபாட்டுக் கெழுவைக் கணக்கிடுக : 20,18,32,24,26

2 ) 18,20,15,12,25, என்ற விபரங்களுக்கு மாறுபாட்டுக் கெழுவைக் காண்க

3 ) 38,40,34,31,28,26,34என்ற புள்ளி விபரங்களின் திட்ட விலக்கத்தைக் காண்க

4 ) முதல் இயல் எண்களின் திட்டவிலக்கம் $\sqrt{\frac{n^2-1}{12}}$ என நிருபி.

5 ) 10,20,15,8,3,4 புள்ளி விவரங்களின் திட்டவிலக்கத்தைக் கணக்கிடுக

6 ) $\sum x = 99$, $n = 9$, மற்றும் $\sum(x-9)^2 = 79$ எனில், $\sum x^2$ மற்றும் $\sum(x - \bar{x})^2$ ஆகியவற்றைக் காண்க

7 ) ஒரு புள்ளி விவரத் தொகுப்பில் $\sum x = 35$, $n = 5$, $\sum(x-9)^2 = 82$ எனில், $\sum x^2$ மற்றும் $\sum(x - \bar{x})^2$ ஆகியவற்றைக் காண்க

8 ) 10 மாணவர்களின் கணிதத்தேர்வில் பெற்றமதிபெண்கள்பின்வருமாறு,
80,70,40,50,90,60,100,60,30,80,இம்மதிப்புகளுக்கு திட்டவிலக்கம் காண்க

9 ) கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள பள்ளி விவரத்தின் திட்ட விலக்கத்தைக் கணக்கிடுக.

| $x$ | 3 | 8 | 13 | 18 | 23 |
|---|---|---|---|---|---|
| $f$ | 7 | 10 | 15 | 10 | 8 |

10 ) ஒரு கணித வினாடி வினாப்போட்டியில் 48 மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| மதிப்பெண்கள் x | 6 | 7 | 8 | 9 | 10 | 12 | 11 |
|---|---|---|---|---|---|---|---|
| நிகழ்வெண்கள் f | 3 | 6 | 9 | 13 | 8 | 4 | 5 |

இவ்விவரத்திற்கான விலக்க வர்க்க சாரசரி காண்க

## ஆயத்தொலை வடிவியல்

**இரண்டு மதிப்பெண் கேள்விகள்**

1 ) ஒரு முக்கோணத்தின் நடுக்கோட்டு மையம் ( 1,3 ) மற்றும் அதன் இரண்டு முனைகள் ( − 7,6 ) மற்றும் ( 8,15 ) எனில் மூன்றாவது முனையைக் காண்க.

2 ) ( 1, 3 ) ( 2 ,7)மற்றும் (12, -16) புள்ளிகளை முனைகளாகக் கொண்ட முக்கோணங்களின் நடுக்கோட்டு மையங்களை காண்க.

3 ) ஒரு வட்டத்தின்மையம் (-6 ,4) அவ்வட்டத்தின்ஒருவிட்டத்தின்ஒருமுனை ஆதிப்புள்ளிஎனில் மற்றொருமுனையைக்காண்க.

4 ) $A(6,7)$ $B(-4,1)$ $C(a,-9)$ ஆகியவற்றை முனைகளாகக் கொண்ட $\Delta ABC$ ன் பரப்பு **68 ச.அலகுகள் எனில்** $a$ **ன் மதிப்புகாண்க.**

**5 )** $3x + 2y - 12 = 0$ $6x + 4y + 8 = 0$ **ஆகிய நேர்க்கோடுகள் இனை என நிறுவுக.**

**6 )** $x + 2y + 1 = 0$ $2x - y + 5 = 0$ **ஆகிய நேர்க்கோடுகள் ஒன்றுக்கொன்று செங்குத்தானது என நிறுவுக.**

**7 ) ( 3 , 5 ) ( 8 , 10 ) ஆகிய** புள்ளிகளை இனைக்கும் கோட்டுத்துண்டை உட்புறமாக 2 : 3 என்ற விகிதத்தில் பிரிக்கும் புள்ளியைக் காண்க.

8 ) சாய்வுக்கோணம் $45^\circ$ மற்றும் $y$ வெட்டுத்துண்டு $\frac{2}{5}$ ஆகியவற்றை கொண்ட **நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**9 )** ( - 2 , 3 ) என்ற புள்ளி வழியேச்செல்லுவதும் சாய்வு $\frac{1}{3}$ உடையதுமான **நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**10 )** $x - 8y + 13 = 0$ **என்ற கோட்டிற்கு இணையானதும் ( 2 , 5 ) என்ற புள்ளி** வழியேச்செல்லுவதும் **நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

**11 ) ஒரு நேர்க்கோட்டின்** $x$ வெட்டுத்துண்டு $\frac{2}{3}$ மற்றும் $y$ வெட்டுத்துண்டு $\frac{3}{4}$ எனில் அக்கோட்டின் **சமன்பாட்டைக் காண்க.**

**ஐந்து மதிப்பெண் கேள்விகள்**

**1 ) ( 7 , 3 ) ( 6 , 1 ) ( 8 , 2 )** மற்றும் ( $P$ , 4 ) என்பன ஒர் இணைகரத்தின் வரிசைப்படி அமைந்த உச்சிகள் எனில் $P$ ன் மதிப்பை காண்க.

2 ) ( - 4 , - 5 ) ( 4 , 5 ) மற்றும் (-1 , -6 )ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட முக்கோணங்களின் பரப்புகளைக் காண்க.

3 ) ( 2 , - 5 ) ( 3 , - 4 ) மற்றும் ( 9 , $K$ ) ஆகிய புள்ளிகள் ஒரு கோடமைவன எனில் $K$ ன் மதிப்பைக் காண்க.

4 ) $(-3, 4)$, $(-5, -6)$, $(4, -1)$ மற்றும் $(1, 2)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

**5 )** $(-4, 5)$, $(0, 7)$, $(5, 5)$ மற்றும் $(-4, -2)$ ஆகிய புள்ளிகளை முனைகளாகக் கொண்ட நாற்கரத்தின் பரப்பைக் காண்க.

6 ) $(-2, -1)$, $(4, 0)$, $(3, 3)$ மற்றும் $(-3, 2)$ ஆகிய புள்ளிகளை வரிசையாக எடுத்துக் கொண்டு சாய்வினைப் பயன்படுத்தி அவை ஒர் இணைகரத்தை அமைக்கும் எனக் காட்டுக.

7 ) . $(2, 1), (-2, 3), (4, 5)$ என்பன $\Delta ABC$ ன் உச்சிகள் உச்சி $A$யிலிருந்து வரையப்படும் நடுக்கோட்டின் **சமன்பாட்டைக் காண்க.**

8 ) $\Delta$ ***ABC*** **ன் முனைகள்** $A(2, -4)$ $B(3,3)$ $C(-1,5)$ **எனில் லிருந்து வரையப்படும் குத்துக் கோட்டுச்** வழியேச்செல்லுவதும் **நேர்க்கோட்டின் சமன்பாட்டைக் காண்க.**

9 ) **பிரிவுச்சூத்திரத்தைப் பயன் படுத்தி A (1 , 0) B(5 , 3) C(2 , 7) மற்றும் D$(-2, 4)$ என்ற வரிசையில் எடுத்துக் கொள்ளப்பட்ட புள்ளிகள் ஒரு இணைகரத்தின் உச்சிகளாகும் என நிறுவுக.**

10 ) **$(-3, 5)$ மற்றும் ( 4 , $-9$) ஆகிய புள்ளிகளை இனைக்கும் கோட்டுத்துண்டினை உட்புறமாக 1 : 6 என்ற விகிதத்தில் பிரிக்கும் புள்ளியின் அச்சுத்தொலைவுகளைக் காண்க.**

**<u>இயற்கணிதம்</u>**

**<u>இரண்டு மதிப்பெண் கேள்விகள்</u>**

1 ) **$x^3 + x^2 - 7x - 3$ என்பதை $x - 3$ ஆல் வகுக்கும் போது கிடைக்கும் ஈவு மற்றும் மீதி காண்க.**

2 ) **$x^3 - 6x^2 - 11x - 6$ என்ற பல்லுறுப்புக் கோவைக்கு $x - 1$ ஒரு காரணி என நிறுவுக.**

3 ) **$\frac{5x+20}{7x+28}$ சுருக்குக.**

4 ) **$\frac{a^3+b^3}{a^2+2ab+b^2}$ என்பதை $\frac{a^2-b^2}{a-b}$ ஆல் பெருக்குக.**

5 ) **$\frac{x^3}{x-2} + \frac{8}{2-x}$ சுருக்குக.**

6 ) **$x^4 + \frac{1}{x^4} + 2$ வர்க்கமூலம் காண்க.**

7 ) **$x^2 - 11x - 10 = 0$ சமன்பாடுகளின் மூலங்களின் தன்மையை ஆராய்க.**

8 ) **$2x^2 - 10x + K = 0$ சமன்பாடுகளின் மூலங்கள் மெய்யெண்கள் மற்றும் சம்மாவை எனில் $K$ன் மதிப்பை காண்க.**

9 ) **3 மற்றும் 4 ஆகியவை மூலங்களாக கொண்ட இருபடிச் சமன்பாடு அமைக்க.**

10 ) **$7 + \sqrt{3}$ மற்றும் $7 - \sqrt{3}$ ஆகியவற்றை மூலங்களாக கொண்ட இருபடிச் சமன்பாடு அமைக்க.**

11 ) **$2x^2 - 3x - 1 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ மற்றும் $\beta$ எனில் $\alpha^2 + \beta^2$ மதிப்புகளை காண்க.**

**<u>ஐந்து மதிப்பெண் கேள்விகள்</u>**

1 ) **$x^3 - 23x^2 + 142x - 120$ பல்லுறுப்புக்கோவைகளை காரணிபடுத்துக.**

2 ) **$x^3 - 3x^2 - 10x + 24$ பல்லுறுப்புக்கோவைகளை காரணிபடுத்துக.**

3 ) **$x^4 + 3x^3 - x - 3$ மற்றும் $x^3 + x^2 - 5x + 3$ ஆகிய பல்லுறுப்புக்கோவைகளின் மீ.பொ.வ. காண்க.**

4 ) **$\frac{x^2+16}{x^2-3x+2} \times \frac{x^2-4}{x^3+64} \times \frac{x^2-4x+16}{x^2-2x-8}$ சுருக்குக.**

5 ) **$(6x^2 - 5x - 6)$ $(6x^2 - x - 2)$ $(4x^2 - 8x - 3)$ வர்க்கமூலம் காண்க.**

6 ) $m - nx + 28x^2 + 12x^3 + 9x^4$ ஆனது ஒரு முழு வர்க்கம் எனில், . $m$, $n$ ஆகியவற்றின் மதிப்புகளைக் காண்க.

7 ) $3x^2 - 5x + 2 = 0$ என்ற சமன்பாட்டின் மூலங்கள் $\alpha$ , $\beta$ எனில். $\frac{\alpha^2}{\beta} - \frac{\beta^2}{\alpha}$ , $\frac{\alpha}{\beta} + \frac{\beta}{\alpha}$ மதிப்புகளை காண்க.

8 ) $16x^4 - 24x^3 + 25x^2 - 12x + 3$ **வர்க்கமூலம் காண்க.**

9 ) **சமன்பாடு $(1 + m^2)x^2 + 2mCx + C^2 - a^2 = 0$ ன் மூலங்கள் சமம் எனில் $C^2 = a^2(1 + m^2)$ என நிறுவுக.**

10 ) **சீரான வேகத்தில் ஒரு தொடர் வண்டியானது 90 கி.மீ தூரத்தைக் கடந்தது அதனுடைய வேகம் மணிக்கு 15 கி.மீ அதிகரிக்கப்பட்டிருந்தால் பயணம் செய்யும் நேரம் 30 நிமிடங்கள் குறைந்திருக்கும் எனில் தொடர் வண்டியின் சீரான வேகம் காண்க.**